கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், சுற்றுநிருபம் - **02/2018**
வடமாகாணம்.
2018.06.05

சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்,

## கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் பட்டியல், கிளைக்குழுக்கள் மற்றும் கிளைக்குழுத் தெரிவு தொடர்பான நடைமுறைகள்.

கூட்டுறவுச் சங்கமொன்றின் உரித்தாளிகள் அச்சங்கத்தின் உறுப்பினர்களேயாவர். உறுப்பினர்களின் பங்களிப்பு இன்றிச் சங்கங்களை நடாத்த முடியாது. இதன் காரணமாக பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள், பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மாவட்ட மட்ட தொழிற்பரப்பைக் கொண்ட ஆரம்பக் கூட்டுறவுச்சங்கள் என்பன உறுப்பினர் பதிவேடுகளைச் சரிவரப் பேணுவதற்கு முக்கியத்துவம் அளித்தல் அவசியம். உறுப்பினர் விண்ணப்பப்படிவம் தொடக்கம் பின்னுரித்தாளி வரையான சரியான விபரங்கள் சங்கங்களின் செயலாளர்களால் பேணப்படல் வேண்டும். அத்துடன் உறுப்பினர்கள் தொடர்புறும் பிரச்சினைகள் என்ற விடயப்பரப்பும் சங்கங்களின் செயலாளர்களால் கையாளப்படவேண்டும். உறுப்பினர்கள் தொடர்புறும் பிரச்சினைகள் சங்கங்களில் தேர்தல்கள் அண்மிக்கும் பொழுதுதான் அதிகரிக்கின்றன. பூரணமற்ற பட்டியல்களின் அடிப்படையில் தேர்தல்களை நடாத்தும்பொழுது அவை பின்னர் கேள்விக்குட்படுத்தப்படுகின்றன. எனவே கிளைமுகாமையாளர் தொடக்கம் சங்கத்தலைவர் ,செயலாளர் வரையானோர் அக்கறையுடன் செயற்பட்டால் இவ்விதமான பிரச்சினைகள் தவிர்க்கப்பட முடியும். எனவே இதனை கூட்டுறவுச்சங்கங்களின் துணைவிதிகள், விதிகள், சட்டங்கள் என்பவற்றுக்கமைய எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பது தொடர்பாகப் பின்வரும் அறிவுறுத்தல்கள் என்னால் வழங்கப்படுகின்றன. அவற்றைப் பின்பற்ற வேண்டியது சங்கங்களின் கடமையாகும்.

1. உறுப்பினர்களை சேர்த்தலும், உறுப்பினர் பட்டியலும்:

துணைவிதிகளில் உறுப்பினர்களை அனுமதித்தல், உறுப்பினர் பதிவேடு எனும் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை கவனமாக வாசித்து அவற்றுக்கமைய உறுப்பினர் விண்ணப்பங்களைப் பெற்று பதிவேடுகளைப் பேணவும்.

1.1. பங்குப்பணத்துக்கான படிவம் 10 வழங்கப்படும் பொழுது குறிப்பிட்ட உறுப்பினரது முழுப்பெயர், முகவரி என்பன தெளிவாக எழுதப்படல் வேண்டும். இதன் பிரதிகள் விண்ணப்ப படிவத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

1.2. உறுப்பினர் பட்டியல் தயாரிக்கப்படும் போது உறுப்பினரது முழுப்பெயர், உறுப்பினர் இலக்கம், பிறந்த திகதி வயது, பால், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம்,தொலைபேசி இலக்கம், பங்கின் பெறுமதி என்ற ஒழுங்கில் அட்டவணைப்படுத்தி தாயரிக்கப்படல் வேண்டும். உறுப்பினர் தொடர்பான மேற்படி விபரங்கள் சரிவர இடம்பெற்றுள்ளதை சங்கத்தின் செயலாளர் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

1.3. மேற்கூறியவாறு விபரங்களை உள்ளடக்கி ஒரு தடவை உறுப்பினர்களது பட்டியல் தயாரிக்கப்பட்ட பின்னர் அதன் இறுதிப்பகுதியில் புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்வதன் மூலம் உறுப்பினர் பட்டியலை எப்பொழுதும் இலகுவாக பூரணப்படுத்திக்கொள்ளலாம்.

1.4. ரூபா 100.00 பெறுமதியான பங்குகளை செலுத்தி ஒரு வருடம் கழிந்த பின்னரே உறுப்பினர் ஒருவர் வாக்காளர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படல் வேண்டும்.

1.5. சங்கத்தினால் உறுப்பினர் பட்டியல் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு ஒரு முறையாவது மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். இதன் படி வருடாந்தம் தை – பங்குனி வரையான

காலத்தில் சகல சங்கங்களும் தனது உறுப்பினர் பட்டியலை மீளாய்வு செய்தல் வேண்டும். இவ்வாறு உறுப்பினர் பட்டியல் சங்கத்தினால் மீளாய்வு செய்யப்படும் போது பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

i. ஒரு கிளையில் ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகள் ஒரு உறுப்பினர் பெயர் காணப்படின் அதனை ஒன்றாக்குதல் வேண்டும்.

ii. ஒரு உறுப்பினர் பெயர் ஒன்றிற்கு மேற்பட்ட கிளைகளில் காணப்படின் அது தவறுதலாக இடம்பெறாத சந்தர்ப்பங்களில் உரிய உறுப்பினர் விருப்பத்தை பெற்று அவர் விரும்பும் கிளையில் உறுப்பினராக உள்வாங்கப்படல் வேண்டும்.

iii. பூரணப்படுத்தப்படாத குறைப்பங்கு பணத்தினைக் கொண்ட உறுப்பினர்கள் அவர்களின் பங்குப்பணத்தை பூரணமாக்குவதற்கு அது தொடர்பான பெயர்ப் பட்டியலை போதுமான கால அவகாசத்துடன் தெளிவான அறிவுறுத்தல்களையும் வழங்கி கிளைகளில் காட்சிப்படுத்திப் பங்குப்பணம் பூரணமாக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதன்படி இச் சுற்றுநிருபம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஒருவருட காலத்துள் முடிவுறுத்துவதுடன், அத் திகதிக்குப் பின் பூரணமாக்கப்படாத பங்குப்பெறுமதி பங்குத் தொங்கல் கணக்கிற்கு மாற்ற சகல சங்கங்களும் நடவடிக்கை எடுத்தல் கட்டாயமானதாகும்.

iv. உரிய உறுப்பினர் இறந்தபின்னர், அவ் உறுப்புரிமை விண்ணப்பத்திலுள்ள பின்னுரித்தாளர் விபரத்திற்கு அமைவாக பங்குப்பணம் மாற்றம் செய்யப்படலாம். எனினும் பின்னுரித்தாளியிடம் சங்கத்தில் உறுப்புரிமை மாற்றம் செய்யப்படுதல் தொடர்பிலும், பின்னுரித்தாளியினது உறுப்புரிமைக்கான தகைமை தொடர்பிலும் உறுதிப்படுத்தல் வேண்டும். (உதாரணம் - பின்னுரித்தாளி இறந்திருத்தல்/ வெளிநாடுகளில் வசித்தல்)

v. இறந்த உறுப்பினர்களினை உரிய ஆவணச் சான்று மூலம் அல்லது உரிய அதிகாரிகளின் உறுதிப்படுத்தலுடன் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்னுரித்தாளிக்கு மாற்றவோ அல்லது பங்குத் தொங்கல் கணக்கிற்கு மாற்றவோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2 கிளைக்குழு அந்தஸ்துள்ள கிளைகள் :-

2.1 கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் ஏற்கனவே கிளைக்குழுவை கொண்டுள்ள கிளைகள் கிளைக்குழு அந்தஸ்துள்ள கிளைகளாக கருதப்படும்.

2.2 புதிய கிளைக்குழு அந்தஸ்துள்ள கிளைகளை உருவாக்குவதற்கு அல்லது இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட கிளைகளை இணைப்பதற்கு அல்லது ஏற்கனவே கிளைக்குழு அந்தஸ்துள்ள ஒரு கிளையை இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட கிளைகளாக பிரிப்பதற்கு சம்மந்தப்பட்ட கிளைகளின் பொதுச்சபையின் தீர்மானம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

2.3 புதிய கிளைக்குழு அந்தஸ்துள்ள கிளைகளை உருவாக்கும் தேவை எழும் போது குறித்த கிளையின் புவியியல் ரீதியான அமைவிடம், அக்கிளையின் அங்கத்தவர் எண்ணிக்கை, சங்கத்தின் வியாபார நோக்கம் ஆகிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

3 கிளைக்குழுத் தெரிவு செய்வதற்கான நடைமுறைகள்:-

3.1 கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் கிளைக்குழுத் தெரிவு நடவடிக்கைக்காக உறுப்பினர் பட்டியல் மூடும் திகதி கிளைக்குழு தெரிவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள திகதிக்கு நேர்முந்தி முடிவடைந்த காலாண்டின் இறுதித்திகதியாக இருத்தல் வேண்டும். (மார்ச் 31, யூன் 30, செப்ரெம்பர் 30, டிசம்பர் 31)

3.2 கிளைக்கான உறுப்பினர் பட்டியல் தயாரித்து இயக்குனர் சபைக்கு சமர்ப்பித்து ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளப்படும் போது உறுப்பினர் பட்டியலின் இறுதிப்பகுதியில் "மேற்படி குறித்த எண்ணிக்கையான அங்கத்தவர்கள் கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமூகமளிக்கவும், வாக்களிக்கவும் தகைமை பெற்ற அங்கத்தவர்கள்" என்பதைக் குறிப்பிட்டு "குறித்த திகதிய இயக்குனர் சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது" என்று சங்கத்தின் தலைவர், செயலாளர் மற்றும் ஒர் இயக்குனர் சபை உறுப்பினர் ஆகியோரால் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும்.

3.3 கிளைகளில் காட்சிப்படுத்தப்படும் மேற்படி உறுப்பினர் பட்டியலின் முதல் பக்கத்தில் ஆட்சேபனை தெரிவிக்கக் கூடிய விடயங்களான உறுப்பினர் ஒருவர் பெயர் காணப்படாமை, உறுப்பினர் பெயர், உறுப்பினர் இலக்கம் மற்றும் முகவரி தவறாக காணப்படுதல், ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் ஒரு உறுப்பினர் பெயர் காணப்படுதல், குறித்த கிளையின் உறுப்பினர் அல்லாத ஒருவரின் பெயர் காணப்படுதல், இரு கிளைகளில் உறுப்பினர் ஒருவரின் பெயர் காணப்படுதல் போன்ற ஆட்சேபனைகளைக் குறித்த திகதிக்கு முன்னர் சங்கத்தின் செயலாளரிற்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தலாம் என்ற அறிவுறுத்தலுடன் செயலாளரின் கையொப்பத்துடன் 14 நாட்கள் காட்சிப்படுத்தல் வேண்டும்.

3.4 காட்சிப்படுத்தப்பட்ட உறுப்பினர் பட்டியல் தொடர்பில் ஆட்சேபனைகள் கிடைக்கப்பெறுமிடத்து அவ் ஆட்சேபனைகள் தொடர்பாக ஆராய்வதற்காக சங்கத்தின் இயக்குனர் சபையை கூட்டி ஆட்சேபனைகளைச் சமர்ப்பித்து அவை தொடர்பில் உறுப்பினர் பட்டியலில் ஏதேனும் திருத்தம் மேற்கொள்ள வேண்டியிருப்பின் அதற்கான இயக்குனர்சபை அங்கீகாரத்தைப் பெற்று உரிய கிளைகளின் அங்கத்தவர் பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இத்தகைய திருத்தங்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு சங்கத்தின் செயலாளரின் உடையதாகும்.

3.5 கிளைகளின் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான அறிவித்தல் கடிதங்கள் கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்கத் தகைமை பெற்றுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் தனித்தனியாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். இக்கடிதங்கள் கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திகதிக்கு ஏழு (07) நாட்களுக்கு முன்னர் உறுப்பினர்களுக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

3.6 சங்கத்தின் பொதுச்சபை அமைப்பதற்கு ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் நோக்குடன் கிளைக்குழுத் தெரிவு நடைபெற்ற தினமே அனைத்து கிளைக்குழு உறுப்பினர்களின் சம்மதத்துடன் கிளைக்குழுத் தெரிவிற்கு தவிசாளராக கடமையாற்றிய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரின் வழிகாட்டலின் கீழ் கிளைக்குழுவிற்கான பதவி தாங்குனர்கள் மற்றும் கிளையினை பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுச்சபைப்பிரதிநிதிகளையும் தெரிவு செய்து கொள்ள முடியும். அவ்வாறாயின் இதற்கான முன்னேற்பாடுகளைச் சங்கத்தின் செயலாளர் மேற்கொள்ளுதல் வேண்டும்.

3.7 கிளைகளின் பொதுச்சபைப் பிரதிநிதிகள் கணிப்பிடப்படும் போது பங்குப்பணம் பூரணப்படுத்திய மொத்த உறுப்பினர்களின் விகிதாசாரமாக கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் சங்கத்தின் மொத்தப் பொதுச்சபைப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை நூறுக்கு (100) மேற்படலாகாது. சங்கத்தின் கிளைகளிற்கு கணிப்பீடு செய்யப்படும் பொதுச்சபைப் பிரதிநிதிகள் விபரம் சங்கத்தின் இயக்குனர் சபைக்கு சமர்ப்பித்து உறுதி செய்யப்படுதல் வேண்டும்.

4 கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல்:

4.1 கூட்டுறவுச் சங்கங்களின் உபவிதி பிரிவுகளின் படி பதிவாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு இணங்க வெளியிடப்படும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமான கிளைக்குழுக்களை தெரிவு செய்வது தொடர்பான ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கிளைக்குழு தெரிவு நடத்தப்படும்.

4.2 துணைவிதிகளில் குறிப்பிடப்படும் வழிமுறைக்கமைவான நடைமுறைகளை பின்பற்றி கிளைக்குழு உறுப்பினர்களை தெரிவு செய்தல் வேண்டும். இவர்களில் ஆகக் குறைந்தது இருவராவது 18 தொடக்கம் 35 வயதுப்பிரிவிற்கு இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். கிளைக்குழுவிற்கு இவ்வயதுக்கிடைப்பட்டோர் இருவருக்கு மேற்படவும் தெரிவாகலாம். மேலே குறிப்பிடப்படும் வயதுப்பிரிவினர் தெரிவாகாவிடின் அவ்விரு இடங்களும் வெற்றிடமாக இருத்தல் வேண்டும். வெற்றிடமுள்ள சந்தர்ப்பத்தில் இவ்வயதுக்கிடைப்பட்ட உறுப்பினர்கள் அக் கிளையில் இணைந்து ஒருவருடத்தின் பின் தகைமை பெறும் போது குறித்த கிளைக்குழு பிறிதொரு தினத்தில்(பொதுச்சபை தெரிவுக் கூட்ட அறிவித்தல் திகதிக்கு முன்னர்) குறித்த வயதுப்பிரிவினரை ஒத்துத்தேர்ந்தெடுக்க முடியும். அவ்வாறு ஒத்துத் தேர்ந்தெடுக்கப்படுபவர் அடுத்த மூன்று மாதத்தில் கிளைப்பொதுச்சபையைக் கூட்டி 18 தொடக்கம் 35 வயதுக்குட்பட்டவர்களின் தெரிவு தொடர்பில் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

4.3 கூட்டுறவுச் சங்க உபவிதிகளில் மகளிர் குழு உறுப்பினர்களின் தெரிவு பற்றி குறிப்பிடப்பட்டிருப்பின் அவ்வேறுபாடுகளுக்கு அமைய உரிய எண்ணிக்கையான மகளிர் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

4.4 கிளைக்குழு தெரிவு நடவடிக்கையின் போது கிளைக்கு தெரிவு செய்யப்பட வேண்டிய உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கைக்கு மேலதிகமான எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் பெயர்கள் கிளைப்பொதுச்சபையினால் முன்மொழிந்து வழிமொழியப்பட்டிருப்பின் உரிய கிளைக்குழு உறுப்பினர்கள் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள்.

4.5 கிளைக்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதும் 1973ம் ஆண்டின் கூட்டுறவுச் சங்கங்களின் விதி 21(iv) இற்கு அமைய, தமது தகைமை பற்றிய உறுதியுரை ஒன்றைச் செய்தல் வேண்டும். இது உறுப்பினர்களது கடமையாகும். சங்கத்தின் செயலாளர் இதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து கொடுத்தல் வேண்டும். இது கீழ்வரும் மாதிரிக்கு அமைய அமைத்தல் வேண்டும்.

அங்கத்தவர்களின் நலன் கருதி, ஜனநாயக முறையில் குறிப்பிட்ட காலத்துக்குள் சங்கத் தேர்தல்களை நடாத்தி முடித்தல் சங்கச் செயலாளரதும், பதவியிலிருக்கும் பணிப்பாளர்சபையினதும் இன்றியமையாத கடமையாகும். இவ்விடயங்களில் சம்பளம் பெற்றுப் பதவி வகிக்கும் செயலாளர் சட்டங்களை மீறாது செயற்பட வேண்டும். மேலே குறிப்பிட்டவை யாவற்றுக்கும் பணிப்பாளர்களும், பணியாளர்களும் தனித்தும், ஒருமித்தும், பொறுப்பாகின்றனர் என்பதை கவனத்தில் கொண்டு செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ் சுற்றறிக்கையானது 2018.06.05ம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

எனது சம இலக்க 2018.03.16ம் திகதிய 02/2018 இலக்க சுற்றறிக்கையானது இத்தால் பிரதியீடு செய்யப்படுகின்றது.

பொ.வாகீசன்,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச்சங்கங்களின் பதிவாளரும்
வடக்கு மாகாணம்.

# கிளைக்குழு உறுப்பினர்களுக்கான உறுதியுரை.

.................................................................................................................................(முகவரி இல் வதியும்........................................................................(முழுப்பெயர்) ஆகிய நான், வரைவுள்ள ..........................................கூட்டுறவுச் சங்கத்தின் ....... ஆம் இலக்க ........................... கிளையின் கிளைக்குழு உறுப்பினராக செயலாற்றுவதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், விதிகள், துணைவிதிகள், பதிவாளரின் அறிவுறுத்தல்கள், பொதுப்பணிப்புரைகள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட தகைமையீனங்கள் எதனையும் உடையவரல்ல என்பதை இத்தால் விசுவாசத்துடன் பிரகடனம் செய்து உறுதி செய்கின்றேன்.

உறுப்பினர் கையொப்பம் .....................

உறுப்பினர் இலக்கம் ........................

சாட்சிகள்:

01 .................................................................................... (முழுப்பெயர்)

கையொப்பம் ......................................

உறுப்பினர் இல ......................................

02. .................................................................................... (முழுப்பெயர்)

கையொப்பம் ....................................

உறுப்பினர் இல ....................................